**செம்பாக்கம் நகராட்சியில் 30.4.2020ம் நாள் வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. கா. ராஜலட்சுமி**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் ஏப்ரல் 2020 மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.642** **பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

செம்பாக்கம் நகராட்சி பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கு தற்போது தமிழக அரசு ஒவ்வொரு நாளும் மக்கள் நலனில் அக்கறை கொண்டு "**கொரோனா வைரஸ்**" தடுப்பு சம்பந்தமாக நாள்தோறும் அறிவிப்புகள் வெளிவந்த வண்ணம் உள்ளது. மேலும், அரசு செயலாளர், பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை கடிதம் ந.க.எண்.01/சிஎஸ்/2020 நாள் 15.3.2020 மற்றும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.5437/ஜெ1/2020 நாள் 15.3.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகள் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் இந்நகரில் கொரோனா தொற்று நோய் வார்டு எண்.6ல் மரூதி காலனி, தனபால் தெரு, வார்டு எண்.15 காமராஜபுரம் அம்பேத்கார் தெரு ஆகிய தெருக்களில் உள்ள ஒரு சிலருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளதாக கண்டறியப்பட்டது. மாவட்ட ஆட்சித்லைவர், செங்கல்பட்டு மாவட்டம் அவர்களின் அறிவுரைகளின் படி இப்பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிப்பு செய்யப்பட்டு தொடர் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பார்வையில் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் சுற்றறிக்கை கடிதத்தில் தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளிலிருந்து பயன்படுத்தப்படும் முககவசங்கள், கையுறைகள் மற்றும் திடக்கழிவுகளை அகற்றுதல் தொடர்பான கீழ்காணும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளில் பயன்படுத்தப்பட்ட கையுறைகள், முககவசங்கள் மற்றும் திடக்கழிவுகள் ஆகியவற்றை கழிவு நீக்கம் செய்ய துாய்மை பணியாளர்கள் முழுபாதுகாப்பு கவச பித்யோக உடை அணிந்து சென்று தனியாக பேட்டரி வாகனங்களின் மூலம் சேகரிக்கப்படல் வேண்டும்.

தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு மட்டும் நாளொன்றுக்கு ஒன்று வீதம் 15 நாட்கள் பயன்பாட்டிற்கான 15 எண்ணிக்கையிலான மஞ்சல் நிற பைகள் மற்றும் அரை கிலோ பிளிச்சிங் பவுடர் கொடுக்க வேண்டும்.

தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளில் பயன்படுத்தப்பட்ட முக கவசம் கையுறைகள் மற்றும் இதர கழிவுகள் மேல் பிளிச்சிங் பவுடர் கரைசல் தெளித்த பின்பு கொடுக்கப்பட்ட மஞ்சள் நிற பைகளில் சேகரித்து அதனை பாதுகாப்பாக மூடப்படும் வகையில் உள்ள தொட்டிகளில் வைத்திருந்து தூய்மைப் பணியாளர்களிடம் வழங்கப்பட வேண்டும்.

தூய்மை பணியாளர்களால் அவ்வாறு பெறப்பட்ட முககவசங்கள் கையுறைகள் அருகிலுள்ள குப்பை கிடங்குகளில் புதைக்கப்பட வேண்டும் அல்லது பெறப்படும் குப்பைகள் அங்கீகரிக்கப்பட்ட எரியூட்டும் நிலையத்திற்கு நேரடியாக தனியாக இலகு வாகனத்தில் அன்றாடம் அனுப்பப்பட வேண்டும்.

மேற்காணும் பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் பரிந்துரையின் பேரில் கீழ்காணும் நிறுவனத்தின் மூலம் பணியினை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**GJ Multiclave (India) Pvt., Ltd,**
No.37/20, Teachers Colony,
Kamarajar Avenue, Adyar,
Chennai-600020.

அதன் அடிப்படை மேற்காணும் நிறுவனம் மூலம் இந்நகராட்சி பகுதியில் தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளில் பயன்படுத்தப்பட்ட கையுறைகள், முககவசங்கள் மற்றும் திடக்கழிவுகள் ஆகியவற்றை கழிவு நீக்கம் செய்வதற்கான உத்திரவினை வழங்கிடவும், இதற்கான தேராய செலவின மதிப்பீடாக ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் சுற்றறிக்கை கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளவாறு மேற்காணும் நிறுவனத்திற்கு அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும், செலவனத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.643 அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

செம்பாக்கம் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் 15 வார்டு பகுதிகளில் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நோய் தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் கிருமி நாசினிகளில் ஒன்றான சுண்ணாம்பு தூள் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் தேவைக்கேற்ப கொள்முதல் செய்துக் கொள்ள 2019–20ம் நிதியாண்டில் இந்நகர் மன்ற தீர்மானம் எண்.438 நாள் 31.1.2019 நிர்வாக அனுமதி வழங்கியதன் அடிப்படையில், ஆண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கொள்முதல் செய்து பயன்படுத்தப்பட்டு வந்தது.

தற்போது இத்தலைப்பின் கீழ் ஒதுக்கீடு தொகை ரூ.1.40 இலட்சம் மட்டும் செலவினம் ஏற்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக கூடுதலாக தேவைப்படும் சுண்ணாம்பு துாள் 15000 கி கொள்முதல் செய்வதற்கும், நிதி ஒதுக்கீடு தொகையில் ரூ.0.60 இலட்சம் மட்டுமே உள்ளதால், அவசர அவசியம் கருதி இத்தலைப்பின் கீழ் ரூ.1.10 இலட்சம் கூடுதலாகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1. கூடுதலாகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர மன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு அங்கிகாரம் வழங்கலாம்.

**தீர்மான எண்.644** அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்.4**

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் அடிப்படையில், செம்பாக்கம் நகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நோய் தொற்று ஏற்பட்டுள்ள இடங்களில் தடை செய்யப்பட்ட (Containment Zone) பகுதியில் உள்ள பொது மக்களுக்கு தொடர்ந்து 10 நாட்களுக்கு கபசுர குடிநீர் வழங்க வேண்டியுள்ளது. மேலும், நகராட்சி சுகாதார பணியாளர்களுக்கும், ஏனைய பொது மக்களுக்கும் வழங்க வேண்டியுள்ளதால், தமிழக அரசின் டாம்கால் நிறுவனத்தில் தேவைக்கேற்ப கபசுர குடிநீர் கொள்முதல் செய்யவும், அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர மன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு அங்கிகாரம் வழங்கலாம்.

**தீர்மான எண்.645** அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

**பொருள் எண்.5**

செம்பாக்கம் நகராட்சி பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கு தற்போது தமிழக அரசு ஒவ்வொரு நாளும் மக்கள் நலனில் அக்கறை கொண்டு "**கொரோனா வைரஸ்**" தடுப்பு சம்பந்தமாக நாள்தோறும் அறிவிப்புகள் வெளிவந்த வண்ணம் உள்ளது. மேலும், அரசு செயலாளர், பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை கடிதம் ந.க.எண்.01/சிஎஸ்/2020 நாள் 15.3.2020 மற்றும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.5437/ஜெ1/2020 நாள் 15.3.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகள் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி நகராட்சி பகுதியில் மக்கள் அதிகம் கூடும் இடங்கள், பேரூந்து நிறுத்தங்கள், கோவில்கள், மசூதிகள்,

சர்ச்கள், அரசு அலுவலகங்கள், சமுதாய கூடங்கள், சமுதாய பொது கழிப்பிடங்கள், அங்கன்வாடி கட்டிடங்கள், நியாய விலை அங்காடி கட்டிடங்கள், வங்கிகள், வங்கி ஏடிஎம்கள், மக்கள் அதிகம் கூடும் சாலைகள், மின் துறை அலுவலகங்கள், அஞ்சல் அலுவலகங்கள், பூங்காக்கள் போன்ற இடங்களில் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அரசு தெரிவித்துள்ள நோய் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் அனைத்து வணிக நிறுவனங்களில் பணியாற்றி வரும் அனைத்து பணியாளர்களும் சமூக இடைவெளியுடன் உரிய பாதுகாப்பு கவசங்களுடன், கையை சுத்தப்படுத்தப் பயன்படுத்தும் Hand Sanitizer ஆகியன பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்நோய் தடுப்பு நடவடிக்கைகளை பின்பற்றாத வணிக நிறுவனங்களை மூடி சீல் வைத்திடவும், பொது மக்களுக்கு (நபர் ஒருவருக்கு) ரூ.100/— அபராதம் விதித்து வசூலித்திடவும், நகராட்சி பகுதியில் அபராதம் வசூலிப்பது தொடர்பாக பொது மக்களுக்கு போதுமான அளவில் விளம்பரபடுத்திடவும், இதற்கான தோராய செலவினம் ரூ.50000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** விளம்பர கட்டணத்தை நசகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.646 அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

செம்பாக்கம் நகராட்சியில் வருவாய் மற்றும் செலவின தலைப்பின் கீழ் பிடித்தம் செய்யப்படும், வருமான வரி மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி பிடித்தங்களை உரிய தலைப்பில் மாதா மாதம் செலுத்தவும் கலந்தாலோசகர் மூலம் வலைதளத்தில் கணக்குகள் தாக்கல் செய்யவும், இதற்கான கலந்தாலோசகர் கட்டணம் பிரதி மாதம் வழங்கிடவும், 2020 – 21ம் ஆண்டிற்கான தோராய செலவினம் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.647 அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

செம்பாக்கம் நகராட்சி பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கு தற்போது தமிழக அரசு ஒவ்வொரு நாளும் மக்கள் நலனில் அக்கறை கொண்டு **“கொரோனா வைரஸ்”** தடுப்பு சம்பந்தமாக நாள்தோறும் அறிவிப்புகள் வெளிவந்த வண்ணம் உள்ளது. மேலும், அரசு செயலாளர், பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை கடிதம் ந.க.எண்.01/சிஎஸ்/2020 நாள் 15.3.2020 மற்றும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.5437/ஜெ1/2020 நாள் 15.3.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகள் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி தடுப்பு நடவடிக்கை சம்பந்தமாக தனியாக நகராட்சி பணியாளர்கள் 10 நபர்களை ஈடுபடுத்தி அவர்களை கொண்டு நகராட்சி பகுதியில் மக்கள் அதிகம் கூடும் இடங்கள், பேரூந்து

நிறுத்தங்கள், கோவில்கள், மசூதிகள், சர்ச்கள், அரசு அலுவலகங்கள், சமுதாய கூடங்கள், சமுதாய பொது கழிப்பிடங்கள், அங்கன்வாடி கட்டிடங்கள், நியாய விலை அங்காடி கட்டிடங்கள், வங்கிகள், வங்கி ஏடிஎம்கள், மக்கள் அதிகம் கூடும் சாலைகள், மின் துறை அலுவலகங்கள், அஞ்சல் அலுவலகங்கள், பூங்காக்கள் போன்ற இடங்களில் மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை கிருமி நாசினிகள் தெளித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளதன் பேரில் உரிய பாதுகாப்பு கவசங்களுடன் வேண்டிய மருந்துகள், கிருமி நாசினிகள் பொது மக்கள் கையை சுத்தப்படுத்தப் பயன்படுத்தும் Hand Sanitizer ஆகியன பயன்படுத்த வேண்டிய அவசியமாகிறது.

மேலும் இந்நகரில் கொரோனா தொற்று நோய் வார்டு எண்.6ல் மசூதி காலனி, தனபால் தெரு, வார்டு எண்.15 காமராஜபுரம் அம்பேத்கார் தெரு ஆகிய தெருக்களில் உள்ள ஒரு சிலருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளதாக கண்டறியப்பட்டது. எனவே, மாவட்ட ஆட்சித்லைவர், செங்கல்பட்டு மாவட்டம் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி, **“கொரோனா வைரஸ் நோய்”** தொற்று ஏற்படாதவாறு நாளொன்றுக்கு 4 முறை கிருமி நாசினிகள் தொடர்ந்து மக்கள் நலன் காத்திட ஏதுவாக கீழ்கண்ட கிருமி நாசினிகள் மற்றும் Sprayer உயிர் காக்கும் சாதனங்கள் போன்றவை வாங்கிடவும், சமூக இடைவெளி நிர்ணயம் செய்யும் குறியீடுகள் அமைக்கும் பணி ஆகியன உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது.

| வ. எண் | விவரம் | தேவைப்படும் அளவு |
|---|---|---|
| 1 | Over Coat | 170 Nos |
| 2 | Lysol | 1600 Ltrs |
| 3 | Gloves | 20000 Nos |
| 4 | Mask | 40000 Nos |
| 5 | Soap | 3000 Nos |
| 6 | Sanitizer | 200 Ltrs |
| 7 | Gum Boot | 200 Nos |
| 8 | Mist Blow Sprayer with Motor | 2 Nos |
| 9 | Yellow Bags Virgin LDPE (24x30) | 10 Kgs |
| 10 | Yellow Bags Virgin LDPE (33x40) | 10 Kgs |
| 11 | Line Marking with Enamel White Paint | 80 Nos |
| 12 | Thermal Scanner | 2 Nos |
| 13 | PPE Use and Throw Kit | 1000 Nos |

மேலும், இப்பணிகளை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்த இயலாத சூழ்நிலையில், அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 15 ன் கீழ் நகராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரி வாங்கப்பட்டதற்கான செலவினத் தொகை ரூ.16.33 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்தோ அல்லது கொரோனா நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு 15ன் கீழ் செலவினம் மேற்கொண்டமைக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.648		அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

செம்பாக்கம் நகராட்சி பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கு தற்போது தமிழக அரசு ஒவ்வொரு நாளும் மக்கள் நலனில் அக்கறை கொண்டு "**கொரோனா வைரஸ்**" தடுப்பு சம்பந்தமாக நாள்தோறும் அறிவிப்புகள் வெளிவந்த வண்ணம் உள்ளது. மேலும், அரசு செயலாளர், பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை கடிதம் ந.க.எண்.01/சிஎஸ்/2020 நாள் 15.3.2020 மற்றும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.5437/ஜெ1/2020 நாள் 15.3.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகள் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் இந்நகரில் கொரோனா தொற்று நோய் வார்டு எண்.6ல் மரூதி காலனி, தனபால் தெரு, வார்டு எண்.15 காமராஜபுரம் அம்பேத்கார் தெரு ஆகிய தெருக்களில் உள்ள ஒரு சிலருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளதாக கண்டறியப்பட்டது. எனவே, தடுப்பு நடவடிக்கைகளில் பணியாளர்களை ஈடுபடுத்திடவும், அவர்களிடம் தகவல் பரிமாற்றம் எளிதில் மேற்கொள்ளும் வகையில், மாவட்ட ஆட்சித்லைவர், செங்கல்பட்டு மாவட்டம் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி, நகராட்சியில் பணிபுரிந்து வரும் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு புதியதாக 16 எண்ணிகையிலான தொலைதொடர்பு கருவிகள் சிம்கார்டுடன் வாங்கி வழங்கிடவும், இப்பணிகளைஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்த இயலாத சூழ்நிலையில், அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 15 ன் கீழ் நகராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.35000/–ற்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| Sl. No | Particulars | No's |
|---|---|---|
| 1 | Key Pad Cellphone | 15 |
| 2 | Smart Phone | 1 |
| 3 | Sim Card with Recharge | 15 |

மேலும், விலைப்புள்ளிகள் கோரிய வகையில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும், குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததார் மூலம் பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருளின் விவரம் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | | |
|---|---|---|---|---|
| | | திரு. கே. ராமதாஸ், ஒப்பந்ததாரர், செம்பாக்கம் நகராட்சி | மெஸ்ஸர்ஸ் எஸ். சுமதி எண்டபிரைசஸ், 326, ஜிஎஸ்டி ரோடு, கடபேரி, சென்னை 45. | மெஸ்ஸர்ஸ் பிக் பாக்ஸ் இன்ஜினியரிங் ஒப்பந்ததாரர், செம்பாக்கம் நகராட்சி |
| 1 | Key Pad Cellphone – 15 nos | 19500 | 20000 | 21000 |
| 2 | Smart Phone – 1 No | 10000 | 11000 | 12000 |
| 3 | Sim Card with | 4500 | 4750 | 5000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | Recharge – 15 Nos | | | |
| | விலைப்புள்ளி விகிதம் | குறைவு | அதிகம் | அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு 15ன் கீழ் உள்ளூர் நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.649** **அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

செம்பாக்கம் நகராட்சியில் கொரானா நோய் தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் மற்றும் செலவினத் தொகை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | நகராட்சி பகுதியில் காய்கறி விற்பனை செய்ய வாடகை அடிப்படையில் நான்கு டாடா ஏஸ் வாகனங்களுக்கு நான்கு நாட்களுக்கான வாடகை தொகை வாகன உரிமையாளர்களுக்கு வழங்கியது | 46000 |
| 2 | நகராட்சி பகுதியில் காய்கறி விற்பனை செய்ய வாடகை அடிப்படையில் ஐந்து டாடா ஏஸ் வாகனங்களுக்கு ஐந்து நாட்களுக்கான வாடகை தொகை வாகன உரிமையாளர்களுக்கு வழங்கியது | 80500 |
| 3 | உயர் மின் அழுத்தம் காரணமாக நகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்ட எம்சிபி கன்டக்டர்கள் மற்றும் அதர மின் சாதன பொருட்கள் மாற்றியது ஒப்பந்ததாரர் திரு. கே. ராமதாஸ்க்கு வழங்கியது | 135615 |
| 4 | கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பிளெக்ஸ் பேனர்கள் அச்சிட்டு நிறுவிய பவானிஸ் பிளெக்ஸ் மற்றும் டிஜிட்டல் பேனர்ஸ்க்கு வழங்கியது | 109549 |
| 5 | கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பிளெக்ஸ் பேனர்கள் அச்சிட்டு நிறுவிய பவானிஸ் பிளெக்ஸ் மற்றும் டிஜிட்டல் பேனர்ஸ்க்கு வழங்கியது | 118575 |
| 6 | கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் பரிசோதனை பெட்டகம் அமைத்தல் பணி ஒப்பந்ததாரர் திருமதி. ஆர். சுஜாதாக்கு வழங்கியது | 177941 |
| 7 | கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் பொது மக்களுக்கு விழிப்புணர்வு நோட்டீஸ்கள், சுவரொட்டிகள், டிஜிட்டல் பேனர்கள் மற்றும் இதர சர்வே படிவங்கள் அச்சிட்டு வழங்கிய ஸ்ரீ கிருஷ்ணா பிரிண்டர்ஸ்க்கு வழங்கியது | 151700 |

| | | |
|---|---|---|
| 8 | காமராஜபுரம் சமுதாய நலக்கூட கட்டிடம் அருகில் 50 எல்பிஎச் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணி செய்த திருமதி. ஆர். சுஜாதாக்கு வழங்கியது | 81530 |

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.650** **அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

பொருள் எண்.10

செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பராமரிக்கப்படும் தெருவிளக்குகளை பராமரிப்பு பணி செய்ய தெருவிளக்கு பணியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்படாத காரணத்தினால், தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியர் மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ள கீழ்கண்டவாறு நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்று மூன்றாண்டுகளுக்கு (2017–18 முதல் 2019–20 வரை) பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ. எண் | நகராட்சி நிர்வாக ஆணையரக அனுமதி எண் மற்றும் நாள் | ஆண்டு |
|---|---|---|
| 1 | தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் கடிதம் ந.க.எண்.13899/2016/டிஒ1 நாள் 24.3.2017 | 2017–18 (முதலாம் ஆண்டு) |
| 2 | தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் கடிதம் ந.க.எண்.13899/2016/டிஒ1 நாள் 31.5.2018 | 2018–19 (இரண்டாம் ஆண்டு) |
| 3 | தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் கடிதம் ந.க.எண்.13899/2016/டிஒ1 நாள் 5.7.2019 | 2019–20 (மூன்றாம் ஆண்டு) 31.5.2020 வரை |

மேற்படி மூன்றாண்டு ஒப்பந்த காலம் 31.5.2020ம் தேதியுடன் முடிவடைகிறது. எனவே, கீழ்கண்ட தெருவிளக்குகளை 1.6.2020 முதல் மூன்றாண்டுகளுக்கு தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியார் மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ளவும், முதலாம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.137.42 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No | Item Description | No. of Lights |
|---|---|---|
| 1 | 40W Tuble Lights | 694 |
| 2 | 27 W CFL | 61 |
| 3 | 85 W CFL | 1404 |
| 4 | 150 W SV Lamps | 115 |
| 5 | 250 W SV Lamps | 1215 |
| 6 | 4x24W TS Energy Saver Lights | 235 |
| 7 | 2x36W TS Energy Saver Lights | 125 |
| 8 | LED 18w | 240 |
| 9 | LED 36w | 96 |
| 10 | LED 50w | 102 |
| 11 | 150 W MHL | 23 |

| | | |
|---|---|---|
| 12 | 250 W MHL | 148 |
| 13 | 400 W MHL | 162 |
| | Total | 4620 |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணியாட்கள் இல்லாததால், பொது மக்கள் நலன் கருதி மேற்கண்ட தெருவிளக்குகளை தனியார் மூலம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் அனுமதிக்கு பிரேரணையை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. அனுமதி பெறப்பட்ட உடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.
4. தெருவிளக்கு பராமரிப்பு செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.651** அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி